## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 32/2020

## Deposition of Witness for : PW 6

| | |
|---|---|
| **Name** | **:** திரு. சக்திவேல் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02-11-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பெரியகுளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 5 வருடத்திற்கு முன்பு இரவுக்காட்சி சினிமா பார்த்து விட்டு நானும், என் நண்பர் ராஜா என்பவரும் இருவரும் இரு சக்கர வாகனத்தில் திருவண்ணாமலையில் இருந்து பெரியகுளம் நோக்கி சென்று கொண்டிருந்த போது காகா ஆஸ்சிரமம் அருகே அரசு வாகனத்தில் இருந்தவர்கள் எங்களை நிறுத்தி விசாரித்தார்கள். அப்போது அவர்களுடன் பேசிக் கொண்டு இருக்கும் போது காஞ்சியில் இருந்து திருவண்ணாமலை நோக்கி ஒரு லாரி வந்தது. அந்த லாரியை நிறுத்தி தாசில்தார் விசாரணை செய்தார்கள். அவர்கள் நிற்காமல் வண்டியை எடுத்து சென்று விட்டார்கள். அரசு அதிகாரிகள் அவர்களுடைய வாகனத்தில் அந்த லாரியை விரட்டி சென்றார்கள். லாரியில் வந்தவர்களும், அரசு அதிகாரிகளும் பேசிக் கொண்டு இருந்தார்கள். பின்னர் அவர்கள் பேச்சை கேட்காமல் லாரியை எடுத்து சென்று விட்டார்கள். அவர்கள் என்ன பேசிக் கொண்டு இருந்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

ஒம்/- சக்திவேல்.

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali.
Additional District Judge,
Tiruvannamalai.